உ

சிவமயம்

மதுரைவாசி

நிரம்பவழகிய தேசிகர் அருளிய

ஞானசம்பந்தகுரு

# தசமணிமாலை.

---

தருமபுர ஆதீனத்துப் பிரதமாசாரிய சுவாமிகள்

அருளிய

இஃது

அவ்வாதீனத்து 23-வது மஹா ஸந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகள்

திரு ஆக்ஞையின்படி

ஸ்ரீகாழி. வித்வான்

ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளை

அவர்களால்

---

சென்னை, இம்பீரியல் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1930.

இஃது திருத் தருமபுர ஆதீனத்து 23-வது மகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் அவர்களுக்கு உரிமை செய்யப் பட்டது.

உ

குருபாதந் துணை.

மதுரைவாசி

# நிரம்பவழகிய தேசிகர்

அருளிய

## ஞானசம்பந்தகுரு

# தசமணிமாலை.

---

சரிதையை நடத்துவித் தனேவர்க்கு மனவாத
சாலோக பதமு நல்ல
சமயநற் கிரியையிற் செல்லவைத் தகலாத
சாமீப பதமு முலகி
லரியசிவ யோகத் திருத்தி சாரூபமோ
டாக்கு ஞானம் புகுத்தி
யதிக சாயுச்ய பதமுதவுந் திருப்பத
மணித்திடாப் பதமு முண்டோ
கருதுபர மானந்த விசிதபரி பூரண
காரண பரம குருவே
கருணைப்ர வாகமுங் கவிதைப்ர வாகமுங்
கரைபுரள நின்ற குருவே

நரி துரக மாகவிடு சொக்கலிங் கங்கையி
னண்ணுமா னந்த குருவே
நாதாந்த குருவேதி காந்தகுரு வேகமலை
ஞானசம் பந்த குருவே. 1

முனிவரொரு நால்வருங் கல்லாலி லுனைவேத
முடிவினைப் பொருள் வினவுவார்
முப்பத்து முக்கோடி தேவர்களு முன்பாத
முத்தியிற் புகுத நினைவார்
மணிதரி லன்ந்தருன் றிருவடியின் ரேணுவை
வணங்கியுங் கதி புகுதுவார்
வழிவழித் தொண்டுபடு மடியனைப் பாகதி
வழிப்பட விடுப்ப தரிதோ
கனியமுது செந்தேன் கரும்புசர்க் கரைபால்
கலந்தனைய பேரின்ப மாங்
கடலொத்த குருவே சிவாகமக் கடலெலாங்
கரைகண்ட பரம குருவே
நனிபெருகு கருணை நதிப்பெருக் கதுகொண்டு
நல்வேடை தீர்த்த குருவே
நாதாந்த குருவேதி காந்தகுரு வேகமலை
ஞானசம் பந்த குருவே. 2

எந்தெந்த மண்டலத் தெப்பெரிய சிவதலத்
தெம்மடத் தெவ்வா லயத்
தெவ்வெவ ரிருப்பினு நடப்பினு நினைப்பினு
மிசைப்பதுவு முனது புகழே
யந்தந்த மனிதருக் கானந்த பரவச
மளிப்பதுவு முனது பதமே
யடியனே னென்னபரி பக்குவக் குறையுளே
னகலாம லேயருள் செய்சம்
பந்தன்மேற் சுந்தரன் வாகீசன் மாணிக்க
வாசகன் பாடு பாடல்
பயனுடைய வொருவடி வெடுத்த குருவேசிற்
பரானந்த மான குருவே
நந்தந்த மிழ்க்கலையின் வடகலையி னமுதொழுகு
நகைமுகாம் போஜ குருவே
நாதாந்த குருவேதி காந்தகுரு வேகமலை
ஞானசம் பந்த குருவே. 3

வானத்தி லமுதுளது மதுரிக்கு மதுபருகின்
மரண மணுகா தென்றுபூ
மண்டலத் தவரறியு மாறுபோ லோலையில்
வரைந்து பதிபசு பாசமென்

றானத்தி லறிவதல வனுபவித் தறிதலுக்
கொன்றுமே யென்று சொல்லி
யுலகெலாங் குருவெனத் திரிவர்காண் போதனைக்
குனையொத்த குருவா வரோ
தானப்ர காசந் தவப்ர காசம்பரம
சைவசித் தாந்த நிலையிற்
சகலாகமப்ர காசம் பிரவுட கவிதைவித்
தாரப்ர காச முறலான்
ஞானப்ர காசகுரு வேகுரு வெனக்கூறி
நாத்தழும் பேற்று குருவே
நாதாந்த குருவேதி காந்தகுரு வேகமலை
ஞானசம் பந்த குருவே. ... 4.

கரதலா மலகமே சிவகலா மதியமே
கரும்படியில் வைத்த தேனே
கற்பகா டவியேயெ ழுவிக்கோ ராவியே
கருணையி ரணியமே ருவே
யாதனு காரமே யனந்தரவி சோதியே
யபயமுன தபய மெனநின்
றழுதழுது நெக்குநெக் குருகியுரு கித்தினமு
னடியில்விழு நாளெந்த நாள்

பரவுபரி பாகரையு மிருவினைச் சேகரப்
பவக்கடல் படிந்தி டாத
படிதவிர்த் தானந்த சலதிவிளை யாடவிடு
பரமகலி யாண குருவே
நரபதிகள் சுரபதிகண் மாடுமோ டுஞ்சரி
நமக்கெனக் கருது குருவே
நாதாந்த குருவேதி தாந்தகுரு வேகமலை
ஞானசம் பந்த குருவே. 5

பதகமல தூளியிற் பாசநா சப்படும்
பதமென்ப வொருகோ டிபேர்
பரிகலச் சேடம துனக்கெனக் கெனமனம்
பதறிடுவ வொருகோ டிபேர்
கதிதருந் தருமென மடத்தையும் வலஞ்செய்து
கைதொழுவ வொருகோ டிபேர்
காலைமா லையுமுனைப் புகழ்வதே பரமென்று
கவிசொரிவ வொருகோ டிபே
ரிதென்ன திருவுளமி தென்தெய் வீகம்ஆஆ
விதாரிடத் துண்டு பண்டு
மிலையின்று மிலையிதற் கிணையென்று குருராச
ராசர் கொண்டாடு குருவே

நதியிலிம சேதுபரி யந்தமெதி ரொருவரையு
நாடுதற் கரிய குருவே
நாதாந்த குருவேதி காந்த குருவே கமலை
ஞானசம் பந்த குருவே. 6

எனதுநய னமுமனமு முனதுதிரு மேனிநிலை
யெனதுமுடி யுனதடி யிருப்
பெனதுநா வுனதுநா மத்திடம் பயிலுமா
லெனதுசெவி யுனது மொழிவீ
டுனதுபரி கல்மதிற் பருகும்ப்ர சாதமு
முரியநின் கவிதை ரசமு
முருகு பரமானந்த ரசமுமடி யேன்பெற்ற
துலகத்தி லெவர் பெற்றுளார்
புனிதகலை பதினாறு மாறாறகத்தும்
புறத்தும் பொதிந்த பஞ்ச
பூதாதி நாதபரி யந்தமுப் பத்தாறு
தத்துவமும் பொய்த்த கனவா
நனவது கடந்தவெளி யொளியா மெனச்சொல்லி
நங்குறை வறுத்த குருவே
நாதாந்த குருவேதி காந்தகுரு வேகமலை
ஞானசம் பந்த குருவே. 7

நீயிரு வினைத்துரி சறுப்பது நினைப்பர்சிலர்
நினதுசா ணென்பர் சிலர்கண்
ணீர் பொழிய வழுவர்சிலர் விழுவர்சிலர் கம்பலையி
ணிற்பர்சிலர் வேர்வ ரும்பக்
காயமது புளகம் பொடிப்பர்சிலர் துரியங்
கடப்பர்சிலர் பரம சுகமே
கரையறப் பரவசப் படுவர்சில ரிவரொடெக்
காலமடி யேன்கூடு வேன்
பாயிரமு கப்பனுவ லாயிரவி தத்தினும்
பாராட்ட வரிய குருவே
பரசமய பரமதா கமநிமிர சங்கார
பரிதியி னுதித்த குருவே
நாயக னமக்கருளு ஞானப்ர காசகுரு
நாதனென் றோது குருவே
நாதாந்த குருவேதி காந்தகுரு வேகமலை
ஞானசம் பந்த குருவே. 8

அடியிணையென் முடிவைத்த தலைநாளி லேபிரம
ரந்தரத் தோரெழுத் துண்
டதனதொலி யசபா நடத்தொலி யதைக்கே
ளதிற்கோடி ரவிசோ திபர்

ருடலொழுகு மமுதருவி யுண்டுண் டிருந்திருந்
துருகிதுவும் விந்து நாதத்
துண்மைமா தாந்தமிதன் மேலினிதெ னச்சொன்ன
வொருசொ லெப்போது சொல்வாய்
படினகவி ராசரு மகுடபுவி ராசரும்
பரசைவ தவராச ரும்
பணிவிடை யுனக்கெனக் கென்றுதின நிமிடமிடு
பாதார விந்த குருவே
நடுநிலைமை தவறாத சன்மார்க்க குருவே
நயந்தகுண நிபுண குருவே
நாதாந்த குருவேநி காந்தகுரு வேகமலை
ஞானசம் பந்த குருவே. 9

மடமுமட வரிசையு மடப்புறக் காணியு
மலிந்து நலியாது வாழ்க
வாழ்த்துறு மெய்கண்டார் சந்தான நீடூழி
வாழ்கவடி யார்க ணிதமும்
இடமிதென வேகொண்டு நின்றுதுதி செய்துனரு
ளேற்றுவா முகமிடி யிலா
தென்றுநின் பரிசனமு நீயும்வாழ்ந் திடுகவே
நீணிலந் தன்னில் வந்து

விடமிடறு சடைமுடியும் விரிநிலவு மெரிநுதலு
மிருக மழுவுமுழு வையும்
விகடகரி யுரியும்வரி யுரகவலை யமுமிலைய
விருதுபரி புரவோ சையும்
நடனபத முங்கரந் தடியவர் பொருட்டொரு
நார்வடி வெடுத்த குருவே
நாதாந்த குருவேநி காந்தகுரு வேகமலை
ஞானசம் பந்த குருவே. 10

தசமணி மாலை முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

# * தனிப்பாசுரம்.

அன்பெனும் பொருளு மருளெனு முருவு
 மறிந்திடா வறிஞனாய்க் கிடந்த
வடியனேன் றனையுங் கண்டினி திரங்கி
 யறிவனோ டியான்பிரி யாமல்
இன்பில்லைத் தரும்பே ரின்பமாந் திருவு
 மீந்துநீ சுகத்தில்வா ழெனவே
யிருத்தவு மதனைக் கருதிடா திழுக்கு
 மெனையுநீ யாளுநா ளுளதோ
மின்பொலி மணங்கொள் கொன்றைபொன் சொரியும்
 விரிபுகழ்க் கமலையம் பதிவாழ்
விளங்கருள் புரிந்த ஞானப்ர காசன்
 மிகமகிழ்ந் தளித்தவா ரிதியே
மன்பதை யுயிர்க டுன்பொழிந் திடவே
 மதுபொழி சோலைகள் செறியு
மதுரையுந் தருமை நகரியுந் தழைப்ப
 வந்தசம் பந்ததே சிகனே. 1

---

* இயற்றியவர் நாமம் புலப்படவில்லை.

பிணியெனப் பிணிக்கும் பயன்கொளத் தூளங்கும்
பிறவினை வஞ்சனைக் கனுங்கும்
பெரும்பசிக் கொசியு மிடும்பையி ைெடுங்கும்
பிறங்குதீக் கால்வரப் பரியும்
பணிதொடற் கஞ்சுஞ் சோருக் கொதூங்கும்
படுங்கொடுங் கோன்மையி னடுங்கும்
படைபுகத் திகைக்கு மழைவிழாப் பஞ்சம்
பருவரல் வெருவருங் கலங்கும்
மணிபுனற் பெருக்கில் லிமரும்வ லம்வந்
தடுங்கொலை விலங்கினுக் கஞ்சி
யடியனெத் தனைக்கென் றித்தனை நாள்வைத்
தழிபுழுக் கூடுகாத் தூழல்வேன்
மணிமலர்க் கமல மனையநின் பதங்கண்
மருள்கெடக் கொடுப்பதென் றெந்தாய்
மதுரையுந் தருமை நகரியுந் தழைப்ப
வந்தசம் பந்ததே சிகனே.

முற்றிற்று.

---

The Imperial Printing Works, 23, Davidson Street,
Madras.